**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**

**முன்னிலை - திருமதி V. பார்கவி ., B.A.B.L.,L.L.M.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி

-------

2022-ம் ஆண்டு மார்ச் மாதம் 16-ம் நாள் புதன்கிழமை
திருவள்ளுவராண்டு 2053, பிலவ வருடம் பங்குனி மாதம் 02-ம்நாள்

------

**<u>அசல் வழக்கு எண்.116/2021 -ல் இடைமனு எண். 02/2021</u>**

1. மகாராஜன்
2. சாந்தி ..மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

...எதிர்...

1. சுரேஷ்
2. ராமகிருஷ்ணன் ..எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 08.03.2022 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. எஸ். கார்த்திகேயன் அவர்களும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு எஸ். முத்துக்குமார் அவர்களும் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகளைக் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து இதுநாள்வரையில் என் பரிசீலனையில் வைக்கப்பட்டிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**<u>உத்தரவு</u>**

மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு எதிராக 06.09.2021-ம் தேதியன்று பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவை நீக்கரவு செய்து உத்தரவிடக்கோரி மனுதாரர்களால் இம்மனு உ.வி.மு.ச.கட்டளை 9, விதி 7 மற்றும் பிரிவு 151 -ன்படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனுவின் சுருக்கம்</u>

மனுதாரர்கள் அசல் வழக்கில் பிரதிவாதிகள். அசல் வழக்கை எதிர்மனுதாரர்கள்/வாதிகள் மனுதாரர்களுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளனர். அசல் வழக்கு 06.09.2021-ம் தேதியன்று விசாரணைக்காக வாய்தா போடப்பட்டிருந்தது. அன்றையதினம் 2-ம் மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினாலும், கோவிட்-19 கொரனா வைரஸ் தொற்று காரணமாகவும் மனுதாரர்கள் நீதிமன்றத்தில் ஆஜராக முடியவில்லை. எனவே அசல் வழக்கில்

06.09.2021-ம் தேதியன்று மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் ஆஜரின்மையால் ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மனுதாரர்கள் வேண்டுமென்றோ, அலட்சியமாகவோ அன்றையதினம் நீதிமன்றத்தில் ஆஜராகாமல் இருக்கவில்லை. எனவே 06.09.2021-ம் தேதியன்று மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை நீக்கரவு செய்யாவிட்டால் மனுதாரர்களுக்கு பெருத்த கஷ்ட நஷ்டம் ஏற்படும். எனவே மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக அசல் வழக்கில் 06.09.2021-ம் தேதியன்று பிறப்பிக்கப்பட்டுள்ள ஒருதலைபட்ச உத்தரவை நீக்கரவு செய்து உத்தரவிடக்கோரியுள்ள இம்மனுவை அனுமதிக்க வேண்டும்.

3. <u>எதிர்மனுதாரர்கள் தரப்பு ஆட்சேபணைக் குறிப்பாணையின் சுருக்கம்</u>

மனு சட்டப்படியும், நியாயப்படியும் நிலைநிற்கத்தக்கதல்ல. மனுதாரர்களுக்கு இந்த வழக்கில் நல்ல கட்சி இல்லாத காரணத்தினால் வேண்டுமென்றே வக்காலத்து தாக்கல் செய்யாமல் விட்டுவிட்டு தற்போது இம்மனு தாக்கல் செய்திருப்பது சரியல்ல. கோவிட்-19 தொற்று இருந்ததாகக் கூறும் மனுதாரர்கள் அதற்கான எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. கறைபடிந்த கரங்களுடன் மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

4.. <u>இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை</u>

மனுதாரர்கள் /பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதா?

5. இம்மனுவில் மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

6. **<u>தீர்வு</u>**

மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்கள் அசல் வழக்கில் பிரதிவாதிகள் என்றும், அசல் வழக்கை எதிர்மனுதாரர்கள்/வாதிகள் மனுதாரர்களுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளனர் என்றும், அசல் வழக்கு 06.09.2021-ம் தேதியன்று முதல் முறையாக விசாரணைக்காக வாய்தா போடப்பட்டிருந்தது என்றும், அன்றையதினம் 2-ம் மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினாலும், கோவிட்-19 கொரனா வைரஸ் தொற்று காரணமாகவும் மனுதாரர்கள் நீதிமன்றத்தில் ஆஜராக முடியவில்லை என்றும், எனவே அசல் வழக்கில் 06.09.2021-ம் தேதியன்று மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் ஆஜரின்மையால் ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், மனுதாரர்கள் வேண்டுமென்றோ, அலட்சியமாகவோ அன்றையதினம் நீதிமன்றத்தில் ஆஜராகாமல் இருக்கவில்லை என்றும், 06.09.2021-ம் தேதியன்று

மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை நீக்கரவு செய்யாவிட்டால் மனுதாரர்களுக்கு பெருத்த கஷ்ட நஷ்டம் ஏற்படும் என்றும், எனவே மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக அசல் வழக்கில் 06.09.2021-ம் தேதியன்று பிறப்பிக்கப்பட்டுள்ள ஒருதலைபட்ச உத்தரவை நீக்கரவு செய்து உத்தரவிடக்கோரியுள்ள இம்மனுவை அனுமதிக்க வேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

7. எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்களுக்கு இந்த வழக்கில் நல்ல கட்சி இல்லாத காரணத்தினால் வேண்டுமென்றே வக்காலத்து தாக்கல் செய்யாமல் விட்டுவிட்டு தற்போது இம்மனு தாக்கல் செய்திருப்பது சரியல்ல என்றும், கோவிட்-19 தொற்று இருந்ததாகக் கூறும் மனுதாரர்கள் அதற்கான எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றும், கறைபடிந்த கரங்களுடன் மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

8. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்குக் கோப்புகள் பரிசீலிக்கப்பட்டன. வழக்குக்கோப்புக்களை பரிசீலனை செய்தபோது இந்த அசல் வழக்கானது எதிர்மனுதாரர்கள்/ வாதிகளால் மனுதாரர்கள்/ பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு அசல் வழக்கில் மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு அழைப்பாணை சார்வுசெய்யப்பட்டு முதல் முறையாக விசாரணைக்காக 06.09.2021-ம் தேதியன்று வாய்தா போடப்பட்டுள்ள நிலையில் மனுதாரர்கள் அன்றையதினம் ஆஜரின்மையால் ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டு ஒருதலைபட்ச சாட்சியத்திற்காக வாய்தா போடப்பட்டு வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது தெரியவருகிறது. மனுதாரர்கள்/பிரதிவாதிகள் 06.09.2021-ம் தேதியன்று நீதிமன்றத்தில் ஆஜராகாததற்கு 2-ம் மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லை என்றும், கோவிட்-19 தொற்று ஏற்பட்டது என்றும் காரணம் என்று கூறப்பட்டுள்ளது . ஆனால் அதை நிரூபிக்கக்கூடிய ஆவணங்களை மனுதாரர்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து நிரூபிக்கவில்லை. இருப்பினும் மனுதாரர்கள் அவர்களுக்கு எதிராக அசல் வழக்கில் 06.09.2021-ம் தேதியன்று பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதை நீக்கரவு செய்ய வேண்டுமென்று உரிய காலத்திற்குள் 14.09.2021-ம் தேதியன்று இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளதை கருத்தில் கொண்டும். இது விசாரணை நீதிமன்றமாக இருப்பதாலும், இவ்வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலையை கருத்தில் கொண்டும், மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு ஒரு வாய்ப்பு கொடுத்து அசல் வழக்கில் மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக 06.09.2021-ம் தேதியன்று பிறப்பிக்கப்பட்ட

ஒருதலைபட்ச உத்தரவை நீக்கரவு செய்து மனுதாரர்கள் தரப்பு கட்சியை கேட்டு மேற்கொண்டு வழக்கை நடத்த அனுமதிப்பதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

9. மேலும் மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனுவினை அனுமதித்து மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கட்சி செய்து வழக்கை நடத்த அனுமதிப்பதே இவ்வழக்கில் சரியான தீர்வு காணவும், இவ்வழக்கின் மீது ஏற்படும் பல்வேறு மேல்நடவடிக்கைகளையும் (Multiplicity of proceedings) தடுக்கும் என்றும் இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே தரப்பினர்களுக்கு வழக்கை நடத்த போதிய வாய்ப்பு வழங்குவது அவசியமானது என்று கருதி மனுதாரருக்கு ஒரு வாய்ப்பு அளிக்கும்விதமாக மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு எதிராக அசல் வழக்கில் 06.09.2021-ம் தேதியன்று பிறப்பிக்கப்பட்டுள்ள ஒருதலைபட்ச உத்தரவை நீக்கரவு செய்து உத்தரவிடக்கோரியுள்ள இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவதுதான் நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்றும், மனுவின் தன்மையை கருதி இம்மனுவில் இருதரப்பினரும் அவரவர்கள் செலவுத்தொகையை அவரவர்களே ஏற்றுக்கொள்ளவேண்டுமென்றும் இந்நீதிமன்றம் முடிவுசெய்து அவ்வாறு இம்மனுவின் பிரச்சினைக்கு தீர்வு காணப்படுகிறது.

10. முடிவில், இம்மனு செலவுத்தொகையின்றி அனுமதிக்கப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைதிருத்தம் செய்யப்பட்டு 2022ம் ஆண்டு மார்ச் மாதம் 16-ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி.

<u>பின் இணைப்பு</u>

| | |
|---|---|
| <u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்</u> | - இல்லை- |
| <u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்</u> | -இல்லை- |
| <u>மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்</u> | -இல்லை- |
| <u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்</u> | - இல்லை- |

மா.உ.நீ